


இராயப்பேட்டையில் சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி தி.மு.க. சார்பில் பாக முகவர்கள் மற்றும் பாக உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று நடந்தது. இதில், தயாநிதிமாறன் எம்.பி, நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, பகுதி செயலாளர் மதன்மோகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# உலக முதலீட்டாளர்கள் மாநாடு...

முதல் பக்கத் தொடர்ச்சி

கொல்கத்தா, மும்பை போன்ற நகரங்களே வாகன உற்பத்தியின் மையமாக இருந்த நிலை மாறி, சென்னையை அடுத்த திருப்பெரும்புதூர் பகுதி, ‘தென்னிந்தியாவின் டெட்ராய்டு’ என்று போற்றப்படத்தக்க வகையில், வாகன உற்பத்தி மையமாகவும், உதிரி பாகங்கள் தொழிற்சாலை மையமாகவும் மாறியது.

இதேபோன்று, தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பப் புரட்சியும் தி.மு.க. ஆட்சிக்காலத்தில்தான் ஏற்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, உருவாக்கப்பட்ட ‘டைடல்’ பார்க்தான், இன்று ராஜீவ் காந்தி சாலையில் சிறுசேரி வரை தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் நிறைந்து காணப்படுவதற்கு விதையாக அமைந்தது. எனின் அது மிகையல்ல.

இடையில் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தொழில் வளர்ச்சி தொய்வடைந்திருந்த நிலையில், 2021ல் தி.மு.க. ஆட்சி அமைந்த உடனேயே, தமிழ்நாட்டை தொழில்வளர்ச்சியில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டார்கள்.

2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு லட்சம் கோடி டாலர் அளவிற்கு உயர்த்திட வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

அதிக முதலீடுகளை ஈர்த்து, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கும் பொருட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

தி.மு.க ஆட்சிப் பொறுப்பேற்ற, முதல் ஓராண்டில் உலகையே ஆட்டிப்படைத்த கொரோனா பரவலையும் சமாளித்து 2 லட்சம் கோடி ரூபாய் அளவுக்குத் தொழில் முதலீடுகளை ஈர்த்தது. இதன் மூலம் 3 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் பலனடைந்தனர்.

**அதிக முதலீடுகள் குவியும் மாநிலமாக தமிழ்நாடு!**

இதனால், இந்தியாவில் அதிக முதலீடுகள் குவியும் மாநிலத்தில் ஒன்றாக தமிழ்நாடு உருவெடுத்தது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு, தொழில்துறையில் தமிழ்நாடு புரட்சி செய்து வருவதாக ஒன்றிய அரசே பாராட்டுத் தெரிவித்தது.

இந்தியாவில் எளிதாக தொழில் செய்யக்கூடிய மாநிலங்களின் பட்டியலில் 14வது இடத்தில் இருந்த தமிழ்நாடு, தி.மு.க. ஆட்சிக்கு வந்த ஒரே ஆண்டில் 3வது இடத்திற்கு முன்னேறியது. தற்போது முன்னணி மாநிலமாக உள்ளது தமிழ்நாடு..

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கிவரும் தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு, தானியங்கி வாகனங்கள், ஜவுளி, காலணி மற்றும் தோல்பொருட்கள், தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வான்வெளி மற்றும் பாதுகாப்பு என பல்வேறு வகையான தொழில்களை நிறுவிட ஊக்கமளிப்பதன் மூலம், முதலீடுகள் மேற்கொள்வதற்கு உகந்த மாநிலமாக தொடர்ந்து நிலைநிறுத்திக் கொண்டு வருகிறது.

“எல்லோருக்கும் எல்லாம்” என்ற அடிப்படையில், செயல்பட்டு வரும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, தொழில் வளர்ச்சி என்பது குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டுமல்லாமல், அனைத்து மாவட்டங்களுக்கும் பரவலாக கிடைக்க வேண்டும். குறிப்பாக தென் மாவட்டங்களிலும், பின்தங்கிய மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதில், கவனம் செலுத்தி வருகிறது.

பெண்களுக்கும் அதிக அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்பதிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதியாக உள்ளார்.

**முதல்வரின் சீரிய நடவடிக்கைகளால் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு!**

முதலமைச்சர் அவர்களின் சீரிய நடவடிக்கைகளால் தொழில் வளர்ச்சி யிலும், பொருளாதாரத்திலும் முன்னணி மாநிலமாக உருவெடுத்துள்ளது தமிழ்நாடு.

இந்திய அளவில் ஏற்றுமதியில் முதல் இடத்தைப் பெற்றுள்ள தமிழ்நாடு, மின்னணுவியல் ஏற்றுமதியிலும் முதல் இடத்தில் உள்ளது. மேலும், அதிக எண்ணிக்கையில் தொழிற்சாலைகள் மற்றும் பணியாளர்களைக் கொண்ட மாநிலங்களில் முதலிடத்திலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில், அகில இந்திய அளவில் இரண்டாவது இடத்திலும் உள்ளது

தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு, உள்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக உள்ளதால் தி.மு.க. ஆட்சியில், தொழில் முதலீடுகள் குவிந்து வருகின்றன

தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரை சுமார் 250 ஒப்பந்தங்கள் மூலம் சுமார் 3 லட்சம் கோடி முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது. 4 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. இதற்கெல்லாம் மணிமகுடமாக, ‘உலக முதலீட்டாளர்கள் மாநாடு’ சென்னை - நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்றும் நாளையும் (ஜன. 7, 8) நடைபெறுகிறது.

இம்மாநாட்டில் அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், டென்மார்க், தென்கொரியா, ஜப்பான், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா உள்ளிட்ட 35க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.

இந்த மாநாட்டின் மூலம் தமிழ்நாட்டிற்கு ஐந்தரை லட்சம் கோடி ரூபாய் அளவுக்கான முதலீடுகளை ஈர்க்க வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

2030ஆம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதார மாநிலம் என்ற இலக்கை அடைகின்ற நாள் வெகு தொலைவில் இல்லை.

**தொழில் வளர்ச்சியில் ஒரு பெரும் பாய்ச்சல்!**

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது VinFast நிறுவனம் ரூ.16,000 கோடி முதலீட்டை மேற்கொள்ளவுள்ளது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**உலகின் முன்னணி மின்வாகனத் தயாரிப்பு நிறுவனமான VinFast தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதை உறுதிசெய்துள்ளது.**

**அனைவரது எதிர்பார்ப்புகளையும் விஞ்சி, 16,000 கோடி ரூபாய் மதிப்பில் தூத்துக்குடியில் EV Car மற்றும் மின்கலன் உற்பத்தித் தொழிற்சாலையை VinFast நிறுவனம் அமைக்கவுள்ளது.**

**இது வெறும் முதலீடு அல்ல; தென்தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் ஒரு பெரும் பாய்ச்சல்!**

**தமிழ்நாட்டில் நடைபெறும் நல்லாட்சி மீதும், நம் மாநிலத்தின் ஆற்றல்மிகு மனிதவளத்தின் மீது நம்பிக்கை கொண்டு இந்தப் பெரும் முதலீட்டை மேற்கொள்ளும் VinFast நிறுவனத் தாருக்குத் தமிழ்நாட்டின் முதலமைச்ச ராக எனது மனமார்ந்த நன்றிகள்!**

**உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 இல் இன்னும் இதுபோன்ற பல வியத்தகு சாதனை அறிவிப்புகளைத் தொடர்ந்து எதிர்பார்த்திருங்கள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

# கலைஞர் - ‘கலைஞர் 100’ விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...

முதல் பக்கத் தொடர்ச்சி

ஸ்டார்களை உருவாக்கும் கடைநிலைத் திரைக்கலைஞர்கள் வரை தலைவர் கலைஞருக்காக திரையுலகமே திரண்டு வந்திருக்கிறீர்கள்!

இங்கு கலைஞரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறீர்கள். வாழ்ந்த காலத்தை போலவே, நிறைந்த பிறகும் நித்தமும் நினைக்கக் கூடியவராக தலைவர் கலைஞர் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

2018-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7-ஆம் நாள்! தலைவர் கலைஞர் மறைந்த பிறகு தமிழ்நாடே கலங்கி நின்றது! எல்லாத் தரப்பினரும் கண்ணீரால் அஞ்சலி செலுத்தினார்கள். ஏற்கனவே, கோவையிலும் - சென்னையிலும் கலையுலகத்தினர் சார்பில் புகழஞ்சலிக் கூட்டங்கள் எல்லாம் நடந்தது.

**விழா கொண்டாடுவோருக்கு என் நெஞ்சார்ந்த நன்றி!**

எல்லாத் தரப்பு மக்களும், தொழிலதிபர்கள், டாக்டர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், நீதியரசர்கள் இப்படி எல்லாத் தரப்பு மக்களும் தலைவர் மறைந்த நேரத்திலே அவருக்கு புகழஞ்சலி செலுத்தியது ஒரு மிகப் பெரிய வரலாறு. அதற்கெல்லாம் மகுடம் சூட்டுவதுபோல, அவருடைய நூற்றாண்டு விழாவை இன்றைக்கு சீரும் சிறப்புமாக கலைத்துறை சார்ந்தவர்கள் கொண்டாடி இருக்கிறீர்கள்.

இதற்குக் காரணமான எல்லோருக்கும், அனைத்து அமைப்புகளுக்கும், அனைத்து நண்பர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையிலும் மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற அந்த முறையிலும் மட்டுமல்ல, தலைவர் கலைஞர் அவர்களின் மகன் என்ற அந்த முறையிலும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு அரசியல் இயக்கத்தின் தலைவராக, 50 ஆண்டுகள்! 5 முறைதமிழ்நாட்டின் முதலமைச்சர்! எந்த பொறுப்பை வகித்தாலும், தன்னுடைய படைப்புத் திறனை வெளிப்படுத்துவதில் அவர் குறை வைத்ததே கிடையாது. தன்னுடைய எழுத்தாற்றலாலும், பன்முகப்பட்ட படைப்பாற்றலாலும், ரசிகர்களின் உள்ளங்களில் குடியேறியவர் நம்முடைய தலைவர் கலைஞர்!

**உங்களில் ஒருவராகப் பயணித்தவர்!**

“வசனம் மு. கருணாநிதி” என்று இருந்தாலே படம் வெற்றியடையும். சினிமாவில் சான்ஸ் வாங்க கலைஞரின் வசனத்தை பேசி ஒப்புவிப்பது வழக்கம் ஆனது. அவரின் வசனப் புத்தகங்கள் அதிகமாக அச்சடிக்கப்பட்டு விற்பனை ஆனது. 1947-இல் முதல் படம் ராஜகுமாரி, 2011-இல் கடைசிப்படம் பொன்னர் - சங்கர். 65 ஆண்டுகளாக கலைத்துறையில் பயணம் செய்து “கலையினம் என்பது என் இனம்” என்று உங்களில் ஒருவராக இருந்த உங்களின் கலைஞருக்குத்தான் விழா எடுத்திருக்கிறீர்கள்.

அதனால்தான் கழகம் ஆட்சி அமையும்போதெல்லாம் கலைஞரும், திரைத்துறையினருக்கு ஏராளமான நலத் திட்டங்களை, சாதனைகளை படைத்திருக்கிறார். அந்த வழியில்தான், இப்போதைய கழக அரசும் திரைத்துறையினருக்குப் பல்வேறு திட்டங்களை தீட்டி வருகிறது.

**கோரிக்கைகளை செயல்படுத்தத் தயார்!**

எங்கள் குடும்பமே, கலைத்துறையைச் சார்ந்த குடும்பம் என்பது உங்களுக்கு எல்லாம் நன்றாக தெரியும். அந்த வகையில், நானும் உங்கள் கலைத்துறையைச் சார்ந்தவன்தான். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருக்கும் உதயநிதி அவர்களும் சில மாதங்களுக்கு முன்பு வரை திரையுலகத்தில் கால்பதித்து நின்றவர்தான்.

எனவே, இந்த அமைச்சரவையும், கலைத் துறையினருக்கு நெருக்கமான அமைச்சரவைதான். உங்கள் கோரிக்கைகளை எப்போதும் செயல்படுத்தித் தரத் தயாராக இருக்கிறோம். அந்த அடிப்படையில் சில அறிவிப்புகளை, இந்த மேடையில் நான் வெளியிட விரும்புகிறேன்.

**பூந்தமல்லியில் நவீன திரைப்பட நகரம்!**

என்னுடைய தலைமையிலான நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், எம்.ஜி.ஆர். பிலிம் சிட்டி 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நான்கு படப்பிடிப்புத் தளங்களாக விரைவில் அமைக்கப்பட இருக்கிறது. அதுமட்டுமல்ல, திரையுலகம் சார்பில், கலைஞானி கமல்ஹாசன் அவர்கள் நேராக வந்து என்னிடம் வைத்த கோரிக்கையை ஏற்று, நவீன திரைப்பட நகரம் (Modern Film City) பூந்தமல்லியில் 140 ஏக்கர் பரப்பளவில், 500 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட இருக்கிறது.

அந்தத் திரைப்பட நகரத்தில் பெரிய L.E.D. Wall, நவீன தொழில்நுட்ப அம்சங்களான அனிமேஷன் மற்றும் VFX, Production மற்றும் Post Production பணிகள், 5 நட்சத்திர ஓட்டல் உள்ளிட்ட அனைத்து நவீன வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும் என்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

தலைவர் கலைஞர் அவர்களுக்கு நூற்றாண்டு விழாவை வெகுசிறப்பாக நடத்திக்காட்டிய திரைத் துறையினருக்கு நான் மீண்டும் நன்றி சொல்கிறேன். நான் கொஞ்சம் காலம் கடந்து வந்தேன். அதுமட்டுமல்லாமல், விரைவாகவும் செல்லவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். காரணம், நாளையும், நாளை மறுநாளும் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற இருக்கிறது. அதற்கான பணி காத்திருக்கிறது. அதனால்தான், வேக வேகமாக என்னுடைய உரையை நான் இங்கே ஆற்றி விடைபெற விரும்புகிறேன்.

இங்கே உரையாற்றிய நம்முடைய அருமை கலைத்துறை நண்பர்கள் எல்லோருக்கும் பல்வேறு தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், தொழிலாளர் சங்கத்தினருக்கும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினாக உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றி, நன்றி, நன்றி, நன்றி.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# சூரியனை ஆய்வு செய்யும் ஆதித்யா விண்கலன் நிலைநிறுத்தம்!

## இஸ்ரோ சாதனைக்குப் பாராட்டு!

*புதுடெல்லி, ஜன.7-*

*சூரியனை ஆய்வு செய்வதற்காக ஆதித்யா எல்1 என்ற விண்கலத்தை இஸ்ரோ, கடந்த ஆண்டு செப்டம்பர் 2ந்தேதி வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. இந்த விண்கலமானது ஏறத்தாழ 127 நாட்கள் பல கட்ட பயணத்தை மேற்கொண்டு, பூமியிலிருந்து சுமார் 15 லட்சம் கி.மீ. தொலைவில் உள்ள ‘லக்ராஞ்சியன் பாயின்ட்’ எனப்படும் எல்1 புள்ளியில் இன்று நிலைநிறுத்தப்பட்டுள்ளது.*

*‘லக்ராஞ்சியன் பாயின்ட்’ என்பது பூமிக்கும், சூரியனுக்கும் இடையே நடுநிலையான ஈர்ப்பு விசையைக் கொண்ட ஒரு பகுதி ஆகும். தொடர்ந்து கட்டுப்படுத்தப்பட்ட இயக்கத்தைக் கொண்டு ஆதித்யா எல்1 விண்கலம் ‘ஹேலோ ஆர்பிட்’ எனப்படும் சுற்றுப்பாதைக்குள் நுழைந்துள் ளது. பெங்களூருவில் உள்ள இஸ்ரோ கட்டுப்பாட்டு மையத்தில் இருந்தபடி விஞ்ஞானிகள் இந்தப் பணிகளை மேற்கொண்டனர்.*

*இதன் மூலம் விண்வெளி ஆய்வில் புதிய மைல்கல்லை இஸ்ரோ எட்டியுள்ளது. அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஆதித்யா எல்1 விண்கலம் சூரியன் குறித்த ஆய்வை மேற்கொள்ளும். சூரிய புறவெளியின் வெப்பச் சூழல், கதிர்வீச்சு உள்ளிட்டவை குறித்து இந்த விண்கலம் ஆராய உள்ளது.*

*இந்த நிலையில் இஸ்ரோ தலைவர் சோம்நாத் செய்தியாளர்களை சந்தித்து பேசினார்.*

*அப்போது அவர் கூறியதாவது;*

*“ஆதித்யா எல்1 திட்டம் மொத்த உலகத்திற்குமானது, இந்தியாவிற்கானது மட்டுமல்ல. அதன் அறிவியல் முக்கியத்துவத்தை நாம் அனைவரும் புரிந்து கொண்டு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*இன்று ஆதித்யா எல்1 விண்கலம் துல்லியமான ஹேலோ சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. அதை சரியான புள்ளியில் நிலைநிறுத்த நாம் பல திருத்தங்களை செய்ய வேண்டியிருந்தது. எங்கள் கணக்கீட்டின்படி இப்போது விண்கலம் சரியான இடத்தில் உள்ளது. நமது விஞ்ஞானிகளின் சரியான அளவீடு மற்றும் வேகத் தேவையின் சரியான கணிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஆதித்யா எல்1 விண்கலம் சரியான இடத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.*

*இவ்வாறு சோம்நாத் தெரிவித்தார்.*

# பொங்கல் பரிசுத் தொகுப்பிற்கான டோக்கன் இன்று முதல் விநியோகம்!

*சென்னை, ஜன.7-*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்த பொங்கல் பரிசுத்தொகுப்பினை பெறுவதற்கான டோக்கன் இன்று (7.1.2024) முதல் வீடு வீடாக விநியோகம் செய்யப்படுகிறது.*

*தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை அனைத்துத் தரப்பு மக்களும் சிறப்பாகக் கொண்டாடிடும் வகையில் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு ஆகியவை பொங்கல் பரிசுத் தொகுப்பாக வழங்கப்படும் என்று கடந்த 02.01.2024 அன்று தமிழ்நாடு அரசு அறிவித்திருந்தது.*

*அதனைத்தொடர்ந்து, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த 05.01.2024 அன்று பொங்கல் பரிசுத்தொகுப்புடன் ஒன்றிய, மாநில அரசு ஊழியர்கள், வருமான வரி செலுத்துவோர், பொதுத் துறை நிறுவனங்களில் பணி புரிவோர், சர்க்கரை அட்டைதாரர்கள், பொருளில்லா அட்டைதாரர்கள் தவிர்த்து, ஏனைய குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 1,000 ரூபாய் பொங்கல் பரிசாக நியாயவிலைக் கடைகளில் பொங்கல் திருநாளுக்கு முன்னதாக ரொக்கமாக வழங்கப்படும் என அறிவித்தார்.*

*மேலும், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள இலவச வேட்டிசேலைகள் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் சேர்த்து வழங்கப்படும் என அறிவித்தார். அதன்படி, தகுதியான குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கிடும் வகையில், இன்று (7.1.2024) முதல் வீடு வீடாக டோக்கன் விநியோகம் செய்யும் பணி நடைபெறவுள்ளது.*

*10.1.2024 முதல் 13.1.2024 வரை பொங்கல் பரிசுத்தொகுப்பு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும். 14.1.2024 அன்று விடுபட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கிடவும், பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக தகுதியான அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*இப்பொங்கல் பரிசினை பெற்றிட அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அதிக எண்ணிக்கையில் நியாய விலைக்கடைகளுக்கு ஒரே நேரத்தில் வருவதை தவிர்த்திட நாள் மற்றும் நேரம் குறிப்பிடப்பட்டு டோக்கன் வழங்கப்படவுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள நாள் மற்றும் நேரத்தில் அக்குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசினை பெற்றுக் கொள்ளலாம். இப்பணிகளின் போது நியாயவிலைக் கடை பணியாளர்களுக்கு பொது மக்கள் முழு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.*

# மயிலை கிழக்கு பகுதி வட்டக் கழக செயலாளர்கள் கூட்டம்!

## பகுதி கழக செயலாளர் எஸ்.முரளி அறிவிப்பு !

*சென்னை, ஜன. 7-*

*சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலைத.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி பகுதி அவைத் தலைவர் எஸ். முனுசாமி.தலைமையில்*

*மயிரைல கிழக்கு பகுதி வட்டக் கழக செயலாளர் ஆலோசனைக் கூட்டம் பகுதி கழக அலுவலகத்தில் இன்று (07.01.2023) காலை 11 மணி அளவில் நடைபெறுகிறது.*

*பொருள்: தி.மு.க. இளைஞரணி மாநாடு குறித்து, கழக ஆக்கப் பணிகள்*

*இக்கூட்டத்தில் அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி தெரிவித்துள்ளார்.*